## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 12–ஆம் நாள் வியாழன்கிழமை**

**முதலேற்பு வழக்கு எண்.78/2013 –ல்**

**இடைநிலை மனு எண்.8/2025**

**1.E.மாரிமுத்து**
**2.மோகன்ராஜ்**
**3.முருகன்**
**4.சரோஜா ... மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள்.**

**–எதிர்–**

**1.இந்திராணி**
**2.அமுதவள்ளி**
**3.புஷ்பா**
**4.வளர்மதி ... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 4 வாதிகள்.**

**5.K.வைரவேல்**
**6.P.செந்தில்நாதன்**
**7.P.சங்கர் ... எதிர்மனுதாரர்கள்/ 5 முதல் 7 பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று (12.06.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.S.அனந்தகிருஷ்ணன்** அவர்களும் 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையில் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.A.விஸ்வநாதன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும்

வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

மனுதாரர்கள்/1 முதல் 4-வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் எதிர் -வழக்குரையுடன் தாக்கல்செய்யாமல் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் தாக்கல்செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளகோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 01(A)-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. பாக பிரிவினை கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகள் முதலேற்பு வழக்கை தாக்கல்செய்துள்ளனர். மனுதாரர்கள்/01 முதல்04 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்திற்கு அடிப்படையாக உள்ள சில ஆவணங்களை வழக்கின் தொடக்கத்திலேயே தாக்கல்செய்ய முடியவில்லை. அவை தற்பொழுதுதான் கிடைத்துள்ளன. அவை இந்த வழக்கில் மனுதாரர்களின் எதிர்வாதத்தை நிரூபிக்க அவசியமானவை. ஆகையால் காலதாமதமாக தாக்கல்செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**01 முதல் 04 வரையிலான எதிர்மனுதாரர்களின் தரப்பு எதிருரையின் சுருக்கம்**

02. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானவை. தற்பொழுது மனுதாரர்கள் தாக்கல்செய்ய முற்படும்

ஆவணங்களை யாவும் பொய்யாக புனையப்பட்டவை. உண்மையில் அவை இருந்திருந்தால் அவற்றை ஆரம்ப நிலையிலே மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்திருப்பர். வழக்கு நடவடிக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்தோடு மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர். ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

03. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுதாரர்கள் இந்த மனுவுடன் தாக்கல்செய்ய முற்படும் ஆவணங்கள் சொத்து வரி இரசீதுகளாகவும் மின்கட்டண இரசீதுகளாகவும் சில பதிவுசெய்யப்பட்ட விற்பனை ஆவணங்களின் நகல்களாகவும் உள்ளன. மேற்சொன்ன ஆவணங்களை பொய்யாக புனைந்திருக்க வாய்ப்பில்லை. மேற்சொன்ன ஆவணங்களை தற்பொழுது தாக்கல்செய்ய அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு அநீதி எதுவும் விளையாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் ஏற்பமை குறித்து சாட்சியம் அளிக்கப்படும்போது முடிவுசெய்யப்படும். ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

05. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை